# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2061/41 - 2018 මාර්තු 08 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.03.08

***2061/41 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

*கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படும் என்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.*

*கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை பிரதேச சபை பிரிவில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கட்டுக்குளம்பற்று சிறு பிரிவில் வரோதயநகர் - 243 என் கிராமத்தில் அமைந்துள்ளதும், சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்டதுமான ரீஆர்ஐ/டீடப்லிவ்ஜீ/2014/198 ஆம் இலக்க மற்றும் 2016.02.24 ஆம் திகதிய வரைபடத்தின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள முழுக் காணியின் 4.9455 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட 'ஏ' எனும் காணித் துண்டின் எல்லைகள் பின்வருமாறு:*

*01.* **துண்டு 'ஏ' - தட்டகைக்காடு - விஸ்தீரணம் : 4.9455 ஹெக்டயார்**

வடக்கு : தட்டகைக் காடு மற்றும் வீதி (பிரதேச சபை) ; கிழக்கு: வீதி (பிரதேச சபை) மற்றும் தட்டகைக் காடு ; தெற்கு : தட்டகைக் காடு ; மேற்கு : தட்டகைக் காடு.

கயந்த கருணாதிலக்க,<br>
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

குறிப்பு இல. : 4-3/15/2014/வீஈ/156.<br>
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,<br>
"மிஹிகத மெதுர",<br>
ரஜமல்வத்தை வீதி,<br>
பத்தரமுல்லை,<br>
2018, சனவரி 26.

03 - 964


1A - G 27262 - 17 (2018/03) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk.*எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*